III. 1. பதினாறுவகைப் பிணிகளுக்கான மருந்துகளைக் கடவுளர், பஞ்சபூதங்கள் மேல் தருக்க முறையில் பாடும் நூல். 2. தத்துவம். 3. வரிசை எண் 322 போன்றது.

4. —.

5. சீர்பொருந்தும் சாஷ்த்திரமும் மருந்து வைப்பு
தேவியங்க மானபொருள் பலதுஞ் சொல்லி
ஏர்பொருந்தும் எழுத்தாணி ஓலை அம்மி
இயல்பான கருவிமுதல் பைய்யுஞ் செப்பு

கூர்ரெழுதும் சாஷ்த்திரங்கள் சொன்னா ரானால்
குருவாகு மவருடனே யெதுக்க வேண்டாம்
தார்புகழுஞ் சாஷ்த்திரங்கள் சொல்லி விட்டால்
சண்டாளப் பைய்யுடனே வாங்கு வாயே. 1

6. வந்துகூறி வயித்தியரே சொல்லக் கேளும்
வயித்தியரச கோகணமூன்று தலையும் நான்கு
நீதமுடன் சரீரமார்க் கையே யானு
நிமிஷத்தில் யிதையறிந்துகொள் ளானே யாகில்
இதுவறிந்து ....ச்சைசெய்தான் வயித்திய னாகும்
இல்லாவிட்டால் மடையாரை மாடு மேச்சி
சேதமவர் மனிதரையும் கொள்ளச் செய்வான்
செத்தசவ மாகுமடா நீசெய் மருந்தே.. 33

7. தர்க்க சாஷ்த்திரம் முற்றும்..

8. மூலம். 9. பாட்டல்கண் கேள்வி - பதினெ அமைப்பியில் அமைந்துள்ளன. மு/ள வேறுபாடில்லாது அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். பாட்டுக்கு எதிர்பாட்டுப் போல் அமைக்கப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 1684(k), R. 2269, R. 9000. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பீ. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. தருக்க சாஸ்திரம் என்ற இந்நூல், அகத்தியர் சூத்திரம் இருபது என்ற பெயரிலும், அகத்தியர் தருக்கம் என்ற பெயரிலும் பாட வேறுபாடுகளுடன் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் தருக்க சாத்திரம்

I. **1. 324**. 2. அ. R. 2269. ஆ. TR. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தருக்க சாத்திரம். ஆ. Akattiyar tarukka cāttiram. இ. அகஸ்தியர் தருக்க சாஸ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 14; இருபக்கமும்

முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை; 16. முழுமை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பதினாறு வகைப் பிணிகளுக்கான மருந்துகளைக் கடவுளர், பஞ்சபூதங்கள் மேல் தருக்க முறையில் கூறும் நூல். 2. தத்துவம். 3. வரிசை எண் 322 போன்றது.

4. அகஸ்தீஸ்பர சுவாமிகள் திருவாய் மலர்ந்த தர்க்க சாஸ்திரம்.

5. சீர்பொருதுஞ் சாஸ்திரமும் மருந்து வைப்பும்
தேவியங்க மானபொருள் பலதுஞ் சொல்லி
யோர்பொருது மெழுத்தாணி யோலை யம்மி
யியல்பான கருவிமுதல் பயனைச் செப்பு
கூர்பொருதுஞ் சாஸ்திரங்கள் சொன்னா ரானால்
குருவாகும் அவருடனே வெதுக்க வேண்டாம்
தார்பொருதுஞ் சாஸ்திரங்கள் சொல்லி விட்டால்
சண்டாள பையுடனே மருந்தைக் கேளே. 1

6. விளங்குகின்ற தாம்பூலம் ரோக நாசம்
வழங்குகின்ற பொருளதுதான் சிவத்தின் கூறு
நீங்குகின்ற பிணிசாபம் ஏது னாலே
நினைவுதான் விசுவாச மான தாலே
யோங்குகின்ற சாஸ்திரங்கள் உண்மை ஞானம்
ஓயாத தவத்தின்கூறாக நின்ற மூலம்
யோங்குகின்ற வயித்தியனூ லுரைக்க வேண்டாம்
என்னுடைய சிஷ்யனாய் பணிந்து கேளே. 19

7. —.

8. மூலம். 9. பாடல்கள் கேள்வி - பதில் அமைப்பில் அமைந்துள்ளன. ள/ழ வேறுபாடில்லை. பிழைகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியரிடம் கூறுவதாகப் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 168(k), R. 1085, R. 9000. 2. —. 3. இல்லை.

V 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்தியசில்லறைக்கோவை (முதல் பாகம்). தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் தர்க்க பூரணச் சுருக்கம் 200 என்ற பெயரில் சென்னை சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் எண்கள் 407(j), 1083, 1126(f) என்ற மூன்று நூல்கள் சுவடிகளாக உள்ளன. மேலும் 'ஜி. இராமசாமிக் கோனார் (பதி.), அகத்தியர் புலத்தியருக்கு உபதேசித்த தர்க்க சாஸ்திரம் 300, மதுரை, 1963' என்ற நூலும் பதிப்பாகியுள்ளது.

அகத்தியர் தருக்க சாத்திரம்

I. 1. **325**. 2. அ. R. 9000. ஆ. T.R. 4253. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தருக்க சாத்திரம். ஆ. Akattiyar tarukka cāttiram. இ. வயித்தியந் தர்க்க சாஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 6 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பதினாறு வகைப் பிணிகளுக்கான மருந்துகளைக் கடவுளர், பஞ்சபூதங்கள் மேல் தருக்க முறையில் ஏற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. வரிசை எண் 322 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.
வயித்தியந் தர்க்க சாஷ்த்திரம்.

5. சீர்பொருந்துச் சாஷ்த்திரமும் மருந்தும் வைப்புந்
தேவியங்க மானபொருள் பலதுஞ் சொல்லி
ஓர் பொழுது ரெழுத்தாணி ஓலை வம்மி
இயல்பான கருவிமுத லபையக் கூரைசெப்பு
கூர்பொருதுஞ் சாத்திரங்கள் சொன்னா ரானால்
குருவாகும் அவருடனே யெதுக்க வேண்டாம்
தார்புகழுஞ் சாத்திரங்கள் சொல்லா விட்டால்
சண்டாள பையுடனே மருந்தை வாங்கே. 1

6. தேடரிய சக்கரத்தின் எழுத்தைச் சொல்லு
சிகப்பான தாம்பூரஅட் சரத்தைச் சொல்லு
யேடரிய லோகத்தின் யெழுத்தைச் சொல்லு
யியல்வான பித்தாளை யெழுத்தைச் சொல்வாய்

கோடரிய திறாவுக்குஅட் சரங்கள் சொல்லு
குருவாரமே பண்டிதரைத் தேர்ந்து பார்த்து
நாடரிய யின்னூலின் யெழுத்தைச் சொல்லி
நன்றுநீ மருந்தடைத்த உப்பு வாங்கே. 19

7. —.

8. மூலம். 9. பாடல்கள் கேள்விக்குப் பதில் கூறும் நிலையில் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடு இல்லாது வடசொற்கள் மிகுந்து வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். முற்காலத்தில் பௌத்தர்களும் சைனர்களும் தர்க்கவாதம் புரிந்த செய்தியை அவர்களின் நீலகேசி, குண்டலகேசி என்ற நூல்களின் வழியாக அறிய முடிகிறது. அதுபோல் இந்நூல் மருந்துப் பொருள்களைப் பஞ்ச பூதங்கள் கடவுளர்கள் மேல் தருக்க முறையில் கூறுகிறது. 11. இல்லை.

IV. 1. R.168(k), R. 1085, R.2269. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 407(j), 1083, 1126(g). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. சென்னை சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிறுவனத்தில் அகத்தியர் தர்க்கபூரணச் சுருக்கம் 200 என்ற பெயரில் சுவடி எண்கள் 407(j), 1083, 1126(g) ஆகிய மூன்று சுவடிகள் முழுமையாக உள்ளன.

அகத்தியர் திராவகம் 14

I. 1. **326.** 2. அ. R. 7879. ஆ. T.R. —. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் திராவகம் 14. ஆ. Akattiyar tirāvakam 14. இ. அகஸ்த்தியர் திராவகம் பதினாலு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லாதது. 4. 5. 5. 15 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனையோலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 9; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் வாசி யோக முறைகளையும், நோய்களை நீக்கும் மருந்துகள் செய்ய உதவும் திராவகங்கள் தயாரிக்கப் படும் முறையையும் கூறுகிறது. 2. மருத்துவம். 3. இந்நூலில் கூறப்பெறும் திராவகம் செய்ய ஒவ்வொரு பலம் எடை சூடன், நவச்சாரம், வீரம் இவற்றை எடுத்துக் கொண்டு, சீனம், சாரம், எனுமிவற்றில் 4 பலம் எடையுடன் சேர்த்து, நான்குபடி மூத்திரத்துக்குள் கலந்து பொடித்து, நன்றாய்க் கிண்டி, ஊறவைத்து எந்திரத்தில் அடைத்துத் திருகு கள்ளி விறகால் கிண்டி, பின் இவற்றுடன் சவுக்காரமிட்டு ஆட்டினால் திராவகம் கிடைக்குமெனக் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் இறுதியில் அமுரிஉப்பு, சுண்ணாம்பு உப்பு, வழலையுப்பு இவற்றுடன் பாளையுரம் புழுகும் சேர்த்து நரகுவெண்டரியோடு அரைத்துக் கூட்டியவில்லையை இரவியில் போட்டுச் சூடு பண்ணிய பின்பு சுண்ணத்தில் எரித்துப் பெற்றால் வாதமுடன் வாசியோகமும் பலிக்கும் எனவும் கூறப்படுகிறது.

4. அகஸ்தியர் திராவகம் பதினாலு.

5. பொன்னான திராவகம் வாங்கும் முறைக்குப்
புகலவில்லைப் பதினெண்போர் சித்த ரெல்லாம்
பன்னான சூடனொடு நவச்சாரம் வீரம்
பதினெண்பேதிவகை பலந்தா னொன்று
தன்னான சீனமது பலந்தா னாலு
சாதகமாய்ச் சாரமது பலந்தா னாலு
மின்னான மூத்திரமோ படினா லுக்குள்
விளங்கவே மருந்தெல்லாம் பொடித்துப் போடே 1

6. கட்டியதோர் வில்லைதனை ரவியில் போடு
காய்ந்தபின்பு சுண்ணத்தில் யெரித்து வாங்கு
அட்டியென்ற புரியட்டம் பூரணத்தி னோடும்
ஆனந்தரசாய்ச் சுழிமுனையில் நந்தி மூலர்
பட்டனாள் பலனிதுவே சூஸ்திரமே மூலப்
பலிக்குமடா வாதமொடு வாசி யோகம்
விட்டகுறை பூரணத்தைப் பாடப் போய்நான்
வேதாந்த வாதத்தை வெளிவிட் டேனே. 14

7. தெட்சணாமூர்த்தி திராவகம் பதினாலு சூஸ்த்திரம் முற்றும். சிவமயம்.

8. மூலம் 9. பாடல்களில் பாட பேதங்கள் பிரதி பேதங்கள் காணப்படுகின்றன. அந்தாதியில் பாடப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் புலத்தியருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6214 (m). 2. த.ச.ம.நூ.எண் 121(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றாலும் இந்நூல் 'தெட்சணா மூர்த்தி திராவகம் 14' என்ற பெயரிலும் எழுதப் பட்டுள்ளதால், அகத்தியர்க்குத் தெட்சணாமூர்த்தி என்ற பெயரும் உள்ளது என்பது தெரிகிறது. இந்நூல் 'அகத்தியர் சூத்திரம் 14' என்ற பெயரிலும் வழங்கப்படுவது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை முதல் தொகுதியிலிருந்து தெரிகிறது. இந்நூல், இச்சுவடிக்கட்டில் 92 ஆம் இதழிலிருந்து 96 ஆம் இதழ் வரை எழுதப்பட்டுள்ளது. இந்நூலுடன்,

1. அகத்தியர் பூரண சூத்திரம் 216 (R. 7875) (1 முதல் 66 இதழ்கள்)
2. அகத்தியர் சூத்திரம் 10 (R. 7876) (67 முதல் 70 இதழ்கள்)
3. அகத்தியர் சூத்திரம் 50 (R. 7877) (71 முதல் 87 இதழ்கள்)
4. அகத்தியர் சூத்திரம் 14 (R. 7878) (88 முதல் 91 இதழ்கள்)
5. அகத்தியர் சூத்திரம் 14 (R. 7890) (97 முதல் 101 இதழ்கள்)
6. அகத்தியர் வாகட சூத்திரம் 205 (102 முதல் 169 இதழ்கள்)
7. நாடிச் சுருக்கம் வகை (வசனம்) (R. 7882) (160 முதல் 169 இதழ்கள்)
8. விஷ வைத்தியம் (மந்திரம்) (R. 7883) (140 முதல் 182 இதழ்கள்)

எனும் பிற நூல்களும் உள்ளன.

அகத்தியர் திரிபுவனக் கண்ணாடி

I. **1. 327.** 2. அ. R. 2264. ஆ. T.R. 1285. இ.—. ஈ.—. 3. அ. அகத்தியர் திரிபுவனக் கண்ணாடி. ஆ. Akattiyar tiripuvaṇak kaṇṇāṭi. இ. அகத்தியர் சுவாமிகள் திருபுவனக் கண்ணாடி முதல்

காண்ட முன்னூறில். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபால ஐயர், எண் 28, போக்சாலை, மாம்பலம், சென்னை. 10. 1949 - 50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 7; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. முதலிலும் இறுதியிலும் ஏடுகள் இல்லை. 16. குறை. 17. 13 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் மருத்துவச் செய்திகளைக் கூறுவது. 2. மருத்துவம். 3. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நாலுகாண்டம் 1200 இல் (அகத்தியர் சாலத்திரட்டு) உள்ள முதற்காண்டமாகிய 300 இல் உள்ள ஒரு பகுதியாகும். இம்முதற்காண்டத்தில் சிலந்தி, அரையாப்பு, மூலம், கண்வலி, மேகம் முதலிய நோய்களைத் தீர்ப்பதற்குரிய மருந்துகள், தாளகச் செந்தூரம், கண்ணுக்கு மாத்திரை, பவழபற்பம் முதலியவை செய்யும் முறை, அவற்றைப் பயன்படுத்தும் முறை போன்ற செய்திகள் கூறப் பெற்றுள்ளன. அந்நிலையில், 13 பாடல்கள் அடங்கிய இக்குறை ஏட்டில் பருசு, நாதம், வழலை, பூநீறு, வெள்ளை, வெடியுப்பு, பொட்டிலுப்பு, சீனாக்காரம், வெளிக்கரு, உழனிருப்பு, சவுக்காரம், உதகம் என்பன பற்றிப் பேசப் பட்டுள்ளது.

4. அகஸ்தியர் சுவாமிகள் திருபுவனக் கண்ணாடி முதல் காண்ட முன்னூறில்.

5. பரமான பருசுடைய சித்தருக்கு
நடனமிடும் பாரின் மீதில்
வரமான நாதமது பூமியென்னும்
உப்பதுவாம் வழலை யாதி
திறமான வாதிகட்கும் வயித்தியர்க்கும்
திருவதுவாம் தேசந் தோறும்
உரமண்ணில் பூனீறு பிரமமென்றும்
உலகுறு உரமு மென்றே. 181

6. ஆகுமே ஆணையது நெருஞ்சி
யதின்மூ லியினால் நாகஞ்
சாகுமே வாகு பெருந்தமது
பூனைக்காலி மூலியினால் மரணமாகும்
யேகுமே முத்துப் பற்பம்தாம்
யிஞ்சியுட கிழங்குமூலிகை யதனால்
மாகுமே கோமேதகமும் மேனியதான்
மூலிகையினால் மலரும் பாரே. 193

7. —.

8. மூலம். 9. பரிபாசைச் சொற்கள் மிகுந்து வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். சாலத்திரட்டு என்பது பல காண்டங்களாகச் செய்யப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 250(a), R. 3681. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், இச்சுவடிக்கட்டில் ஓர் உட்கட்டாக 116 முதல் 120 ஆம் இதழ்வரை எழுதப் பட்டுள்ளது. இதனுடனுள்ள பிற நூல்கள் வருமாறு:

1. சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25 (R. 2260) (1 முதல் 7 இதழ்கள்)
2. அகத்தியர் வழலை (R. 2261) (8 முதல் 90 இதழ்கள்)
3. அகத்தியர் வகாரம் வாதசூத்திரம் (R. 2262) (11 முதல் 90 இதழ்கள்)
4. சட்டை முனி சவுக்கார வைப்பு 200 (R. 2263) (91 முதல் 115 இதழ்கள்)
5. அகத்தியர் தத்துவம் (R. 2265) (121 முதல் 160 இத்ழ்கள்)
6. அகத்தியர் சூத்திரம் (R. 2266) (161 முதல் 166 இதழ்கள்)
7. கொங்கணர் சரக்கு வைப்பு 100 (R. 2267) (167 முதல் 172 இதழ்கள்)
8. அகத்தியா பல திரட்டு (R. 2268) (173 முதல் 197 இதழ்கள்)
9. அகத்தியர் தர்க்க சாஸ்திரம் (R. 2269) (198 முதல் 204 இதழ்கள்).

அகத்தியர் தீட்சை நாடி

I. **1. 328**. 2. அ. R. 149(d). ஆ. T.R. 133. இ. R.No. 2116. ஈ. —. 3. அ. அகத்தியர் தீக்ஷை நாடி சூத்திரம். ஆ. Akattiyar tīksai nāṭi cūttiram. இ. அகஷ்தியர் தீக்ஷை நாடி சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி. 1914 - 15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 17. 5. 23 x 5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 34; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இறுதிப் பகுதி இதழ்கள் இல்லை. 16. குறை. 17. 117 பாடல்கள்.

ஆ. 1. 27 x 23 செ.மீ. 2. —. 3. பக்கத்திற்கு 20 வரிகள். 4. நல்ல கையெழுத்து. 5. 16.10.1949 முதல் 25.10.1949 வரை. 6. கே.ஏ. மணவாளன். 7. 27.10.1949. 8. கி.பி. 1949இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. உடம்பில் உண்டாகும் நோய்களைக் கைபிடித்து, நாடிபார்த்தறிந்து அவற்றுக் கேற்ற வைத்திய முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் நாடி நிதானம், நாடி நிலைமை, வாதபித்த சிலேட்டுமங்களின் உற்பத்தி, சுரம், சன்னிகள், சோகை, காமாலை, நீர்க்கோர்வை, நீராமை, பீலிகை முதலிய நோய்களின் வரலாறும், சுரங்களுக்குக் கசாய பாகங்கள் ஆகியனவும் அடங்கியிருக்கின்றன. மேலும் வைத்தியர் இலட்சணம் நாடி நிலையைக் கொண்டு நோய்களின் சாத்திய, அசாத்தியத் தன்மைகளை அறிதல், சுரங்களின் பேதங்கள், அவற்றிற்குக் கசாயங்கள், சன்னி வகை என்பனவும், பற்பல வாதரோகங்களும் அவற்றிற்கு மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. மூலம், குன்மம், ஈளை, இருமல், காசம், நீரிழிவு, சூலை, பாண்டு, காமாலை, சித்தபிரமை முதலிய நோய்களுக்கு மருந்தும் இன்னும் பல செய்திகளும் இந்நூலில் உள்ளன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஷ்தியர் தீக்ஷை நாடி சூஸ்திரம்.

5. பாதுமா மாதுமை பாகனா ரருளிய
தீதிலா வாகடச் செந்தமிழ் செய்திட
நீதியால் விளங்கிது நிறைய வோதுவ
ஆதியாம் பரமனே அருளி தாகுமே. 1

6. யிப்படி யெழுபத் தீராயிர நரம்பெனு நாடி கொண்டு
மொப்புறு நாடிபார்க்கும் கைவினை யுரைப்பக் கேளாய்
வெப்புறு வாதபித்த சிலேற்பன மென்ன மூன்று
நப்பிலா லறிந்து கொள்ளுங் குறிகுணஞ் சாற்ற
லாமே. 117

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ன/ந, ற/ர, ழ/ள வேறுபாடில்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் அனுபோகத்தை ஒட்டித் திரட்டிய பாடல்கள் பெற்ற நூலாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ.எண்கள் 13, 14. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை .

VI. நம் உடம்பில் 72000 நாடி நாளங்கள் உள்ளன எனச் சித்தர்கள் கண்டறிந்ததை இக்காலத்து ஆங்கில வழி மருத்துவர்களும் ஒத்துக் கொண்டுள்ளனர். இந்நூல் உட்கட்டாக அமந்துள்ள சுவடிக்கட்டில் R. 149 இல் கீழ்க்காணும் வேறு நூல்களும் உள்ளன.

1. தீஷை விதி (R. 149(a)) (1 முதல் 44 இதழ்கள்)
2. அகத்தியர் சூத்திரம் 200 (R. 149(b)) (45 முதல் 85 இதழ்கள்)
3. அகத்தியர் வைத்திய செந்தூரம் 300 (R. 149(c)) (86 முதல் 161 இதழ்கள்)
4. நாடி நிதானம் முதலியன (R. 149(e)) (180 முதல் 191 இதழ்கள்)
5. பத்திரிகிரியார் மெய்ஞ் ஞானப் புலம்பல் (R. 149(f)) (193 முதல் 209 இதழ்கள்)
6. பட்டினத்துப் பிள்ளையார் பாடல் (R. 149(g)) (211 முதல் 215 இதழ்கள்)

7. அகத்தியர் யோகம் 16 (R. 149(h)) (222 முதல் 226 இதழ்கள்)

8. திருவேகம்பமாலை (R. 149(i)) (228 முதல் 235 இதழ்கள்)

9. பட்டினத்துப் பிள்ளையார் பாடல் (R. 149(j)) (236 முதல் 254 இதழ்கள்).

அகத்தியர் தீட்சை விதி 200

I. 1. **329**. 2. அ. R. 9018. ஆ. T.R. 4268. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தீட்சை விதி 200. ஆ. Akattiyar tīṭcai viti 200. இ. அகஷ்த்தியர் தீட்சை பாடல் 200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 32. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 64; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதர்கள் நோயின்றி வாழ்வதற்குரிய மருத்துவ, யோக, ஞானக்கருத்துக்களைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் ஞானம். 3. இந்நூலில் முதலாவதாக வாசியோகம் எனும் சிவயோகமும், பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளும் கூறப்படுகின்றன. மீனம், கன்னி, தனுசு, மேடம், துலா, சிம்மம் ஆகியவை பற்றி முதலில் கூறப்படுகின்றது. பின்பு இப் பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்களின் பலன்கள் 27 நட்சத்திரங்களுடன் இணைத்துப் பார்க்கப் பெறுகின்றன. கற்பம் உண்ணுவதற்கான காலம் அடுத்த நிலையில் கூறப்படுகிறது. துலாம் இராசிக்காரர்கள் சிவன் மந்திரங்களைச் செவித்தால் குளிகைசித்தி, வாத சித்தி எல்லாம் பெற்று, பத்து விதத் தீட்சைகள் பெற்ற சிவயோகியாவார்கள். கன்னி முதல் மீனத்தோர்கள் கொள்கையில் வணிகரைப்போல் கூர்ந்த புத்தியுடன் வாசி யோகத்தில் சிறந்து விளங்குவார்கள். தேவியின் பூசையில் அதிக நாட்டம் இல்லாத இவர்கள் மயக்கம் இல்லாமல் காயசித்தி செய்தால் பலன் கிடைக்கும் என்று இந்நூல் கூறுகிறது. தனுசு இராசியில் பிறந்தவர்கள் தாயைப்

போற்றுவார்கள். பலவகைச்சித்திகளைக் கைக்கொள்வார்கள். குருவை வணங்குவார்கள். நல்ல சாத்திரங்கள் பல தேடி மக்களுக்குப் போதிக்கும் குணம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். மேற்கூறிய இராசிகள் அல்லாத 7 இராசிகளில் பிறந்தவர்கள் வெறும் வீண் பேச்சு மட்டும் பேசுவார்கள். அவர்களுக்கு எதுவும் கிட்டாது. எனவே அவர்கள் இதைச் செய்ய இயலாநிலை அடைகின்றார்கள் என்றும் நூலாசிரியர் கூறுகிறார். குணங்களை அறிந்து கொள்ள செவ்வாய், புதன், வியாழன், திங்கள் ஆகிய நாள்களில் கற்பங்கள் சாப்பிடலாம் என்றும் அவ்வாறு கற்பம் உண்ணும் போது 10 வித தீட்சைகளைக் காதில் கேட்கவேண்டும் என்றும், முடியாவிட்டால் 5 விதம் தீட்சைகளையாவது கேட்க வேண்டும் என்றும், எதுவும் கேட்காவிட்டால் கற்பம் உண்டபயன் கிட்டாது என்றும் இந்நூல் கூறுகிறது. இவ்வாறு கற்பம் உண்டு உடலைத் தூய்மை செய்த பிறகு பிராணாயாமம் செய்ய வேண்டும் என்றும், இதைச் செய்தால் இறவாநிலை பெறலாம் என்றும், இதில் மிகவுயர்ந்த நிலை யோக மார்க்கமாகிய வாசியோகம்தான் என்றும், இதைச் செய்தால் இவ்வுலகத்தில் சித்த நிலை பெறலாம் என்றும் கூறி, பிராணாயாமம் செய்யும் முறையையும் கூறுகிறது. பிராணாயாமம் என்பது சுவாசப் பயிற்சியாகும். உள்ளே இருக்கும் சுவாசத்தை உள்ளுக்கு நிறுத்துதல், வெளியிடுதல் ஆகிய காற்று (சுவாச) நட மாட்டத்தை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு ஒழுங்கு முறைப்படுத்தும் பயிற்சியே பிராணாயாமம் ஆகும். சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தல் பூரகம் என்றும், வெளியிடும் சுவாசத்தை இரேசகம் என்றும், உள்ளுக்கு நிறுத்தி வைக்கப்படும் சுவாசம் கும்பகம் என்றும் கூறப்படுகின்றன. பிராணாயாமம் செய்யும் போது வயிறு காலியாக இருக்க வேண்டும். இடது நாசித்துவார சுவாசத்துக்கு இடகலை அல்லது சந்திரகலை என்றும், வலது நாசித் துவார சுவாசத்துக்குப் பிங்கலை அல்லது சூரிய கலை என்றும் கூறுவர். உள்ளுக்குச் சுவாசத்தை நிறுத்திச் செய்யும் போது நினைவினைச் சுழிமுனையில் நிறுத்த வேண்டுமென்கிறது. அடுத்த நிலையில் காந்த செந்தூரம் செய்யும் முறையும், அயச் செந்தூரம் முறையும் அவற்றை உட்கொள்ளும் முறையும் கூறப்படுகின்றன. நாற்பத்து முக்கோண சக்கரத்தின்

விதிமுறைகள் தொடர்ந்து கூறப்படுகின்றன. வாசியை வசியம் பண்ணுவதற்கான நிலைகள், சாப நிவர்த்தி, பராபரை தீட்சை, வாலை தீட்சை, புவனை தீட்சை, சாமளை தீட்சை, சுப்பிரமணியர் தீட்சை, சிவ தீட்சை, சக்தி தீட்சை முதலான தீட்சை முறைகளும் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் பலகாரங்கள், பால், பழம், மாமிசம், தேன், நெய் முதலியன வைத்துப் படைத்துத் தங்கள் சாபத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்றும் கூறப்படுகின்றது. மூதண்ட இலேகியம் செய்யும் முறையும், செய்த இலேகியத்தை மவுன சக்திப் பூசையில் வைத்து வழிபட்டு, காலை மாலை இருவேளை சாப்பிட்டுப் பிராணாயாமம் செய்து வந்தால் தூய்மையான யோகசித்தி கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது. இறுதியாக வழலை மார்க்கம் என்னும் முப்பு செய்யும் முறையுடன் நூல் முற்றுப் பெறுகிறது.

4. ஹரி ஓம். அகஷ்த்தியர் தீட்சை பாடல் 200.

5. வானைத் தாவிய பொதிகை
மகத்தான ரிஷியுடைய வாக்கின் நேர்மை
பானைத் தாவிய பூசை
பரிவான சிவயோகம் பண்ணுவோர்கேள்
மீனைத் தாவிய ராசி
விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லுமேடம்
சேனைத் தாவிய துலாத்தின்
சென்மராசிக் கருவைச் செப்புறேனே. 1

6. பணிமாறு காலத்தில் மணியி னோசை
பாங்கான சேகண்டி னாத வோசை
பணிமாறு காலத்தில் மவுன தோத்திரம்
பத்தியுறும் வாலைகையிலே கியத்தை யீய்ந்து
பணிமாறு காலத்தில் சகல சித்தும்
பரிவாகத் தூவென்று, கையில் வாங்கிப்
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் பூசைவிதி தீட்சை யாமே. 201

7. —.

8. மூலம். 9. பாட பேதங்கள் மிகுதி. உவமை, உருவகம் நிறைந்த செழுமையான நடை; பாடல்கள் அந்தாதியில் பாடப்

பெற்றுள்ளன. யமக அமைப்புள்ள பாடல்களும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. தீட்சை விதி, தீட்சா விதி எனவும் அழைக்கபெறும். இத்தீட்சை நூற்கருத்துக் களைச் சிவன் முதலில் உமைக்குக் கூற, உமை நந்திக்குக்கூற, நந்தி அகத்தியர்க்குக் கூற அகத்தியர் புலத்தியர்க்குக் கூறியதாக உள்ள மரபு அறியக் கிடக்கிறது. 11. இல்லை .

IV. 1. D.1816, D. 1817, D. 1818, D. 1885, D. 1886, R. 149 (a), R.4760, R. 6148. 2. உ.த.நி.எண் 352:585. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தீட்சை என்பது உபதேசித்தலாகும். தீட்சைகள் பத்துவகைப்படும். 1. சக்தி தீட்சை, 2. சிவதீட்சை, 3. வாலை தீட்சை, 4. சரியைதீட்சை, 4. கிரியைதீட்சை, 6. யோகதீட்சை, 7. ஞானதீட்சை, 8. நவக்கிரக தீட்சை, 9. உலோக தீட்சை, 10. சித்தர் தீட்சை என்பன. இந்நூலுள் சிவதீட்சையுடன் சிவ புராணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றுடன் மருத்துவப்பாகங்களும் உள்ளன. இதனால் தீட்சை பாகம் என அவை கூறப்பெறும். சித்தி செய்தல் என்பது தீட்சை முடித்தலாகும். உப்பு முதலிய சரக்குகளைக் காய்த்துச் சித்தி செய்தல் தீட்சை முடித்தலாகும். அகத்தியர் பெயரில் அமைந்த 'தீட்சைவிதி 16' என்ற நூல் ஒரு சுருக்கநூலாகும். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி 30 இல் இந்நூல் 'அகத்தியர் பாடல்' எனத் தலைப்பிடப் பெற்றுள்ளது.

அகத்தியர் தேவாரத்திரட்டு

I. 1. **330**. 2. அ. D. 1123. ஆ. T.D. 557. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tirattu. இ. அகத்தியத்திரட்டு. 4. —. 5. —. 6. உத்தண்டியப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5 . 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 42. 5. 18 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 84; இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளது. பதிகத் தலைப்புகள் இடது ஓரத்தில் எழுதப் பெற்றுள்ளன. 13. பக்கத்திற்கு 10

வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்; 250 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவ மகத்துவம் கூறும் மூவர் தேவாரப் பதிகங்களிலிருந்து திரட்டப் பெற்ற 25 பதிகச் செய்திகள் உள்ள நூல். 2. பதிகம். 3. மூவர் தேவாரத்திலிருந்து திரட்டிய 25 பதிகங்களைக் கொண்டு இந்நூல் திகழ்கின்றது. திருஞான சம்பந்தர் தேவாரத்திலிருந்து 10 பதிகங்களும், திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து 8 பதிகங்களும், சுந்தரர் தேவாரத்திலிருந்து 7 பதிகங்களுமாகத் திரட்டப் பெற்றுள்ளன. இவை அனைத்தும், ஓதுதலுக்கும், மனனம் செய்தலுக்கும் எளிமையான பதிகங்கள் என நம்பப்படுகின்றன. மேலும் சிவனுடைய பெருமை, திருநீற்றின் சிறப்பு, ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமை போன்றவை இப்பதிகப் பாக்களில் மிக்கோங்கி நிற்கின்றன. சிவ தலங்களின் சிறப்புக்களையும் இவை எடுத்தோதுகின்றன.

பாடியவர்		பதிகப் பெயர்	பண்	பாடல்கள்
திருஞான சம்பந்தர்	1.	திருப்பிரமபுரம்	நட்டபாடை	11
	2.	திரு ஆலவாய் திருநீற்றுப்பதிகம்	காந்தாரம்	11
	3.	பஞ்சாக்கரத் திருப்பதிகம்	காந்தார பஞ்சமம்	11
	4.	நமச்சிவாயத் திருப்பதிகம்	கௌசிகம்	11
	5.	திரு கூடித்திரக் கோவை	இந்தளம்	11
	6.	திரு வெழுகூற்றிருக்கை	சிவனுருவம்	11
	7.	திருக்கடவூர்மயானம்	காந்தாரம்	11
	8.	திருவாழ்கொளிபுத்தூர்	தக்கராகம்	11
	9.	திருப் பூந்தராய்	காந்தாரபஞ்சமம்	11
	10.	கோளறுபதிகம்	பியந்தைக் காந்தாரம்	11
திருநாவுக்கரசர்	1.	திருவதிகைவீரட்டானம்	கொல்லி	10
	2.	நமச்சிவாயத் திருப்பதிகம்	காந்தாரபஞ்சமம்	10

	3.	திரு கேஷத்திரக் கோவை	திருத்தண்டகம்	11
	4.	கோயிற்றிருவிருத்தம்	சிவனுருவம்	10
	5.	திருப்பூவணம்	——	11
	6.	திருவதிகை விரட்டானம்	திருவடித் திருத்தாண்டகம்	10
	7.	ஸ்ரீ கைலாயம்	திருத்தாண்டகம்	11
	8.	திருவாரூர்த் திருவிருத்தம்	கொல்லி	10
சுந்தரர்	1.	திருவெண்ணெய் நல்லூர்	இந்தளம்	10
	2.	திருப்பாண்டிக் கொடுமுடி	பழம்பஞ்சாரம்	10
	3.	ஊர்த்தொகை	பழம்பஞ்சாரம்	10
	4.	திருக்கடவூர் மயானம்	பழம்பஞ்சாரம்	10
	5.	திருப்புன்கூர்	தக்கேசி	10
	6.	திருக்கழுக்குன்றம்	நட்டபாடை	10
	7.	திருத்தொண்டத்தொகை	——	11

4. குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சும் கோவி
லரனுருவ மென்றலை மேலாக்குந் - திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலை யற்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

அகவல்

தோடு கூற்றா பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்
நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை
மாற்றுப் பரையின் வரலா றாகும்
....

தீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதினா ரவரே

திருச்சிற்றம்பலம் சிவனே துணை.
ஞான தேசிகன் திருவடிகளே துணை.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே.

6. மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் (காளே கன்பரா வாரே). 11

7. திருச்சிற்றம்பலம். சிவகணபதி பாதார விந்தமே துணை. சிவன் பாதார விந்தமே துணை. சிவகுருநாதா பாதார விந்தமே துணை. சித்தம்பல சுவாமிகள் பாதார விந்தமே துணை. சிதம்பர சுவாமிகள்பாதார விந்தமே துணை. சிவனே துணை. ஆறுமுகந் துணை. குருவே துணை. சிவசற்குரு பாதாரவிந்தங்களே துணை.

8. மூலம். 9. இசையோடு பாடுதற்குரிய பாடல்கள்; எளியநடை; மனனம் செய்வதற்கு ஏற்றவை; பாடவேறு பாடுகள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் திரட்டப் பெற்ற நூலாயினும், இப் பதிகங்களைப் பாடியோர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆவர். 11. விளம்பி வருசம் மார்கழி மாதம் 11 ஆம் தேதி மணவூரிலிருக்கும் கயிலாய முதலியார் குமாரன் உத்தண்டியப்பன் எழுதி நிறைந்த திருவாசகமும், அகத்தியர்த் திரட்டும் முற்றும்.

IV. 1. D. 1124, D. 1125, D. 1126, D. 1127, D. 1128, D. 1129, R.1291. 2. த.ப.க. எண்கள் 87; 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பென்னம்பலம் பிள்ளை (பதி.), வித்தியாநுபாலன யந்திரசாலை, —, பரிதாபி ஆண்டு (11 ஆம் பதிப்பு). 3. இல்லை.

VI. சிவாலய முனிவர் வேண்டிக்கொள்ள மூவர் தேவாரத்திலிருந்து 25 பதிகங்களை அகத்தியர் என்பவர் திரட்டித் தந்ததால் இந்நூல் 'அகத்தியர் தேவாரத் திரட்டு' எனப் பெயர் பெற்றுள்ளது என்பர். அகத்தியர் தேவாரத் திரட்டு எனும் இந்நூல் திருஞான சம்பந்தரின் சற்புத்திர மார்க்கம், திருநாவுக்கரசரின் தாசமார்க்கம், சுந்தரரின் சகமார்க்கம்

ஆகியவற்றைச் சிவனடியார்களுக்கு உணர்த்துவதற்காகச் செய்யப்பட்டது என நம்பப்படுகிறது. இத்திரட்டு நூலைச் சிவாலய முனிவர் மனனம் செய்து முத்தி பெற்றார் என்ற வரலாறு ஒன்று வழக்கிலுள்ளது. அதனடிப்படையில் யாரொருவர் இதை நாள்தோறும் ஓதுவாரோ அவர் முத்தி அடைவார் எனக் கூறப்படுகிறது. இத்திரட்டு நூலை ஓதுவோர் தேவாரப் பாக்கள் அனைத்தையும் ஓதுதலால் உண்டாகும் இன்பத்தைத் துய்ப்பர் என்பதும் பெறப்படுகின்றது.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. **1. 331.** 2. அ. D. 1124. ஆ. T.D. 171. இ. —. ஈ. —. 3. அ.அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. அகஸ்தியர் தேவாரத் திரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 81. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 162; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. விடுபாடு இல்லை. ஆயினும் சிதைவு காரணமாகப் பல ஓலைகள் முறிந்துள்ளன. 16. முழுமை. 17. சிதைவு காரணமாகப் பாடல்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

ஆ. —.

III. 1. சிவமகத்துவம் கூறும் தேவாரப் பாக்களிலிருந்து திரட்டப்பெற்ற நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

4. —.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே

னென்னவனா மரனடியேயடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் (காளே கன்பரா வாரே). 11

7. திருச்சித்தம்பலம். சிவசிதம்பரம் துணை... னகத்தியத் திரட்டு எடுத்தவன் குடுக்கவும்... திருவடிவாழ்க ஆனந்த விநாயகர்துணை.

8. மூலம் 9. இசையோடு பாடப்பெறும் பாக்கள்; எளிய நடையில் அமைந்தவை. அதனால் மனப்பாடம் செய்ய ஏற்றவை. பிழைகள் மலிந்துள்ளன. பாடவேறுபாடுகள் கொண்டநூல். 10. சிவாலய முனிவர் வேண்டிக்கொள்ள அகத்தியர் என்பவரால் திரட்டப்பெற்ற பதிகங்கள் ஆதலால் அகத்தியர் தேவாரத்திரட்டு என்ற பெயரில் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1123, D. 1125, D. 1126, D. 1127, D. 1128, D. 1129, R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு' பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திரா சாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் அடங்கல் திரட்டுப் பதிகம் 25' என்ற பெயரிலும் வழங்கப்படுகின்றது.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. 1. **332.** 2. அ. D. 1125. ஆ. T.D. 558. இ. —. ஈ. —. 3. அ.அகத்தியர் தேவாரத்திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. அகஸ்தியர் அடங்கத்திரட்டுப் பதிகம் 25. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 64; தலைப்பு ஏடு 1. 5. 18 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 137; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 64 ஆம் ஓலையில் 4 வரிகளே உள்ளன. 13. பக்கத்திற்கு 7 முதல் 8

வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்; 250 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவமகத்துவம் கூறும் தேவாரப் பதிகங்களிலிருந்து திரட்டப்பெற்ற நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

4. தேவிசகாயம் நன்றாக. அகஸ்த்தியர் திரட்டுப் பதிகம் 25 திருச்சிற்றம்பலம். மூவரம்மானை வடிவுடையம்மன் நவரத்தினம். திருச்சிற்றம்பலம். சிவ கணபதி வேணும். நன்றாக வாழ்க.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. தேன்மரப் பொழில்களா லைவினை
சேன்னறுள்ளி வளர் செம் பொருளெங்குதிகடி
நான் முக னாதியாய பிரமாபுரத்து மறை ஞான முனிவன்
றானுறு கோளுந் நாளு மடியாரை வருதுடலியாத
யான் சொன்ன மாலை யோது வண்ணமுறை
செய்படியார்கள்
வானிலரசாள் வாரா ணைமாதோ.

7. திருச்சிற்றம்பலம். சிவமயம்.

8. மூலம். 9. இசையுடன் பாடுதற்குரிய பாக்கள்; எளி யநடை. மனப்பாடம் செய்ய ஏற்றவை. 10. சிவாலய முனிவர்க்காக அகத்தியர் என்பவர் திரட்டியது. ஆதலால் அகத்தியர் பெயரில் வழங்கப்படுகிறது. 11. அ. சம்பந்தர் திருப்பிரமபுரம் பண் நட்ட பாஷைதோடுடைய செவியன். ஆ. அப்பர் திருவதிகை வீரட்டானம் பண் கொல்லி கூற்றாயினவாறு. இ. சுந்தரர் திருவெண்ணெய் நல்லூர் பண் இந்தளம், பித்தா பிறை சூடி. ஈ. சம்பந்தர் திருவாலவாய் பண் காந்தாரம், மந்திரமாவது நீறு, துஞ்சலும் பண் காந்தார பஞ்சமம், காதலாகி பண் கவுசிகம், சொற்றுணை வேதியன் பதிகம் பண் காந்தார பஞ்சமம், திருப்பாண்டிக் கொடுமுடிபண் பழம் பஞ்சுரம், சேத்திரக்

கோவை பண் இந்தளம், சேத்திரக் கோவை பண் திருத்தாண்டகம், ஊர்த்தொகை பழம் பஞ்சுரம் திருவெழுக் கூற்றிருக்கை பண்.....ஆகப் பதிகம் 25. திருச்சிற்றம்பலம். சிவ சுப்பிரமணிய துணையுண்டாக இரட்சிக்கவும் நன்றாக.

IV. 1. D. 1123, D. 1124, D. 1126. D. 1127. D. 1128. D. 1129. R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு' பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலனயந்திராசாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. இந்நூலில் 25 பதிகங்களின் பெயர்களும் பாட்டுத் தொடக்க அடிகளும் கொடுக்கப் பெற்றுள்ளன. இச்சுவடியின் இறுதி ஏட்டிலுள்ள செய்தி: அடங்கற்றிரட்டுக்கு அட்டவணை – முதலிகள் மூவர் திருப்பாடல் தேவாரங் கனக சபையில் தாபரம் பண்ணியிருக்கையில் யிராச ராசேந்திர சோழன் தேடிக் காணாமல் நம்பியாண்டார் நம்பி முருகனையாகத் திருநாரையூர் விக்குனேசுவரர் திருவிளம்ப வுற்றின படிக்குக் கண்டெடுத்து[ச்] சேர்வையிட்டபடிக்குத் தொகை விபரம். 'காழியினிற் சம்பந்தர் தனக் கன்புடனே' எனத் தொடங்கும் வெண்பாவும் உள்ளது.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. 1. **333**. 2. அ. D. 1126. ஆ. T.D. 559. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tirattu. இ. அகஸ்த்தியர்த் திரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 40. 5. 35 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 79; இரு பத்திகளாக எழுதப்பட்டுள்ளது. வரிகளின் இறுதி எழுத்துக்கள் தனித்து நிற்கின்றன. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்.

ஆ.—.

III. 1. சிவ மகிமை கூறும் மூவர் தேவாரப் பாக்களிலிருந்து திரட்டப் பெற்ற 25 பதிகங்கள் கொண்ட நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

4. சம்பந்த சுவாமிகள் பாடல் திருப்பிரமபுரம் நட்ட பாடை பண் பந்துவராளி.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்
மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியேயடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

7. அரகரவென் றனுதினமுந் தொழுதென் னாவி
ஆருயிர்சென் றணைத்துமுக மாறுள் ளானை
சிரநடுவி லிருபதமுஞ் சிறந்து னாடிச்
சிவாயவுயி ரோங்கா ரத்திட மேத்தி
பரவெளியி லொளிமதியோ டிரவு சூழும்
பங்கய்ய பூங்கதிர் மாலையான் னெங்கள்
குருபரனை யமரர்தொழுங் குமார வேளைக்
கும்பிட்டே னென்பிறவி பின்விட் டேனே. 1

அருவாகி யுருவாகி யகண்ட மாகி
ஆறெழுத்தா யகாரவுயி ராதி மூலத்
தருவாகி ஒருனாலு சதுர மாகி
திரிகோணக் கதிர்மாலை வாச மாகி
மருவாகி யிதழ்பரந்த மேரு வாகி
மண்டலங்க ளுடுருவி மாறி யாடுங்
குருவாகி நின்றிலங்குங் குமார வேளைக்
கும்பிட்டே னென்பிறவி பின்விட் டேனே. 2

ஒருனாலு சதுரநிலை யேழு ளாகி
ஓங்கார சுழிமுனைகொண் டெழுந்த கார
தெருளாகி யிதழ்பரந்த தீப மாகித்
தேடரிய கதிர்மலைத் தெய்வ மாகி
தருவாகிப் பொருளாகித் தானவனு மாகித்
தளராத சிவயோகப் பால நேர்மை
குருவாகி நின்றிலங்குங் குமார வேளைக்
கும்பிட்டே னென்பிறவி பின்விட் டேனே. 3

8. மூலம். 9. எளிய நடையிலான பாடல்களாதலால் விரைவில் மனனம் செய்யத் தக்கவை. இசையுடன் பாடுதற்கு ஏற்றவை. 10. அகத்தியர் பெயரில் திரட்டப் பெற்றவை. சிவாலய முனிவர் விருப்பத்திற்கிணங்க திரட்டப்பெற்றவை. 11. இல்லை.

IV. 1. D. 1123, D. 1124, D. 1125, D. 1127, D. 1128, D. 1129, R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திரா சாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

Vi. இந்நூலுடன் கதிர்காம முருகன் பெயரில் பாடப்பெற்ற 3 பாடல்கள் உள்ளன.

அகத்தியர் தேவாரத்திரட்டு

I. 1. **334**. 2. அ. D. 1127. ஆ. T.D. 560. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத்திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. சிவாலைய மகரிஷிக்கு அருளிச் செய்த அகஸ்த்தியத் திரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 41. 5. 35x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 81: இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இடது ஓரம் பதிகப் பெயர்கள் உள்ளன. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்.

ஆ.—.

III. 1. சிவ மகத்துவம் கூறும் தேவாரப் பாடல்களிலிருந்து திரட்டப்பெற்ற நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

4. திருப்பிரமபுரம் பண்.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்
மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியேயடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

7. திருச்சிற்றம்பலம். சிவன் துணை.

8. மூலம். 9. எளிதில் நினைவு கொள்ளக் கூடிய எளிய இனிய பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. 10. சிவாலய முனிவர் வேண்டிக் கொண்டதற்காக அகத்தியர் என்பவரால் திரட்டப் பெற்ற நூல். 11. இல்லை.

IV. 1. D. 1123, D. 1124, D. 1125, D. 1126, D. 1128, D. 1129, R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திரா சாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. மிகுந்தளவில் பாடப்பெற்ற தேவாரப் பாக்கள் அனைத்தையும் பாடி இன்புறுவது இயலாததாகையால், அவ்வின்பம் 25 பதிகங்களில் கிடைக்குமாறு திரட்டப் பெற்றிருப்பது அருமை.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. *1.* **335**. 2. அ. D.1128. ஆ. T.D. 220. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. அகத்தியர் திரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூர., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 21 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 2; 6ஆம் ஓலையின் ஒரு பக்கமும், ஏழாம் பக்கத்தில் 3 வரிகளும் எழுதப்பெற்றுள்ளன. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்; 250 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவ மகத்துவம் கூறும் மூவர் தேவாரப் பதிகங்களிலிருந்து தேர்ந்து திரட்டப் பெற்ற 25 பதிகங்களாலான நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

4. குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ் சுங்கோயி
லரனுருவ மென்றலை மேலாக்குந்–திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலையற்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியேயடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் காளே வாரே. 11

7. —.

8. மூலம். 9. பாடல்கள் எளிய நடையிலமைந்தவை. இசையோடு பாடத்தக்கன. பண், இராகம், தாளம் பெற்று அமைந்துள்ளன. பாடபேதங்கள், பிழைகள் மிகுதி. 10. சிவாலய முனிவர் என்பார் வேண்டிக் கொண்டதற்கேற்ப அகத்தியர் என்பவர் தேவாரப் பதிகங்களிலிருந்து 25 பதிகங்களைத் திரட்டித் தந்ததால் இந்நூல் 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்ற பெயரில் வழங்கப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1123, D. 1124, D. 1125, D. 1126, D. 1127, D. 1129, R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திராசாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. இத் திரட்டு நூலடங்கிய சுவடிகள் தமிழும் சைவமும் வழங்கப்பெறும் பகுதிகளிலிருந்து பெறப்பட்டவையாகத் தெரிகின்றன.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. 1. **336**. 2. அ. D.1129. ஆ. T.D. 193. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. (பதிகப் பெயர் உள்ளது). 4. —. 5. —. 6. சரபமூர்த்தி. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 52. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 103; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பதிகங்கள்; 250 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவமகத்துவம் கூறும் மூவர் தேவாரப் பதிகங்களிலிருந்து திரட்டப்பெற்ற 25 பதிகங்கள் கொண்ட நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 போன்றது.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே. 1

6. மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
நிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியேயடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

7. திருச்சிற்றம்பலம். குருபாதமே துணை.

8. மூலம். 9. பாடல்கள் மனனம் செய்வதற்கு எளிமை யானவை. இசைக் குறிப்புக்களுடன்கூடியவை. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற நூல். சிவாலய முனிவர் வேண்டிக் கொள்ள அகத்தியர் என்பார் தொகுத்ததால் இப்பெயர் பெற்றதுஎன்பர். 11. கூவமான் கொண்ட பாகன்சேரி குடமூடி அரசராணையார் சரப மூர்த்தி எழுத்து. அகத்தியத் திரட்டு எழுதி முடிந்தது. அழியா வரத்தய்யா பாதமே துணை.

IV. 1. D. 1123, D. 1124, D. 1125, D. 1126, D. 1127, D. 1128, R.1291. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திரா சாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் மருத்துவ நூல்களும், சோதிட நூல்களும், மாந்திரீக நூல்கள் போன்றவையும் வழங்கப் பெறுவன போல் தேவாரத் திரட்டுப் பாடல்களும் வழங்கப் பெறுகின்றன.

அகத்தியர் தேவாரத் திரட்டு

I. 1. **337**. 2. அ. R. 1291. ஆ. T.R. 968. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆ. Akattiyar tēvārat tiraṭṭu. இ. அகத்தியத் திரட்டு வரலாறு. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஸ்ரீமுத்துக் குமாரசுவாமி ஒதுவா மூர்த்தி, திருநெல்வேலி. 10. கி.பி.1938-39.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 22 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 14; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 12 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 39 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவமகத்துவம் கூறும் தேவாரப் பாக்களிலிருந்து திரட்டப்பெற்ற பாடல்கள் கொண்ட நூல். 2. பதிகம். 3. வரிசை எண் 330 ஐப் போன்றதாயினும் இந்நூலில் திருப்பிரமபுரம், திருவதிகை வீரட்டானம், திருவெண்ணெய் நல்லூர் என்பன பற்றி முறையே பத்துப் பத்துப் பாடல்களும், திருவாலவாய் திருநீற்றுப் பதிகத்தில் 9 பாடல்களும் உள்ளன.

4. திருச்சிற்றம்பலம்.

குருவருளும் வெண்ணீறெழுத் தஞ்சுங் கோயி
லரனுருவ மென்றலை மேலாக்குந்–திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலை யர்க்கென்
றிட்டார்அகத்தியனா ரெட்டு.

தோடு கூற்றாபித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பொருளாகும்.

5. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே 1

6. மாலோ டயனறி யாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலமு துண்ட மிடற்றெம் ஆலவா யான்திரு நீறே. 9

7. —.

8. மூலம். 9. பாடல்கள் எளிய நடையிலுள்ளன; இனிய சந்த நயமுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த இந்நூல்

சிவாலய முனிவர் வேண்டிக் கொள்ள அகத்தியர் என்பவரால் திரட்டப் பட்டதாகக் கூறுவர். 11. இல்லை.

IV. 1. D. 1123, D. 1124, D. 1125, D. 1126, D. 1127, D. 1128, D.1129. 2. த.ப.க. எண்கள் 7, 89, 424. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு', பொன்னம்பலம் பிள்ளை (பதி.) (11 ஆம் பதிப்பு), வித்தியாநுபாலன யந்திரா சாலை, பரிதாபி ஆண்டு. 3. இல்லை.

VI. இந்நூலுடன் கீழ்க்காணும் வேறு நூல்களும் ஒரே சுவடிக்கட்டில் இடம் பெற்றுள்ளன:

1.	தருக்க பரிபாஷை (துறைமங்கலம் சிவப்பிரகாசர்)	R.1292
2.	சைவ சித்தாந்தப் பிரகாசக் கட்டளை (சிவஞானமுனிவர்)	R.1293
3.	பதிபசு பாச தரிசனம்	R.1294
4.	ஞானசாரம் (கண்ணுடைய வள்ளலார்)	R.1295
5.	சிவார்ச்சனாபோதம்	R.1296
6.	தருக்க ஸங்கிரஹம் (சிவஞான முனிவர்)	R.1297

அகத்தியர் நவக்கிரகக் கக்கிசம்

I. 1. 338. 2. அ. R.8901. ஆ. T.R. 3197. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நவக்கிரகக் கக்கிஷம். ஆ. Akattiyar navakkirakak kakkisam. இ. அகஸ்தீய சுவாமியாரருளிச் செய்த நவக்கிரகக் கக்கிஷம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 40. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 80; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது; 13. பக்கங்கள் நான்கு நான்கு பத்திகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. 14. வெண்பா, விருத்தம், உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. 95 பாடல்கள், அட்டவணை.

ஆ. —.

III. 1. சூரியன், சந்திரன் முதலான நவக்கிரகங்களின் பலா பலன்களை மந்திர எந்திர மாந்திரீகத்துடன் இணைத்துச் சோதிடப் பலன்களைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. சூரியன், சந்திரன் உள்ளிட்ட ஒன்பது கிரகங்கள் செலுத்தும் ஆதிக்கங்களின் அடிப்படையில் நவகண்ட சக்கரங்களை அமைத்துக்கொண்டு பலா பலன்களைக் கூறும் நூல் இது. சிவபெருமானே சூரியன். உமாதேவியே சந்திரன். சுப்பிரமணியர்–அங்காரகன். திருமால்–புதன். பிரமா–குரு. இந்திரன்–சுக்கிரன். எமதருமர்–சனி. பத்திரகாளி–இராகு. சித்திரகுப்தன்–கேது இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒரு கிரகம் இணைத்துக் காட்டப்படுகிறது. அவரவர்க்குரிய சக்கரங்கள் வரையப்பெற்று விளக்கிக் காட்டப் பெற்றுள்ளன. மந்திரங்கள் மூலம் மரணபயத்தைப் போக்கவும் வழிமுறைகள் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறான பயங்களை வீட்டிலிருந்தோ கோயில்களுக்குச் சென்றோ இறைவனை வழிபடுவதின் மூலம் போக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

4. னாயன் முன்னறிற்க. அகஸ்திய சுவாமியர் அருளிச் செய்த நவக்கிரகக் கக்கிஷம்.

5. இந்துர விதழலா யெட்டா வெளியொளியாய்
அந்தரங்கமான வரும்பொருளாய் - வந்தகுகா
திக்கு விசையஞ் செலுத்து நவக்கிரகக்
கக்கிஷத்துக் குன்னிருதாள் காப்பு. 1

6. கண்டுபார் வேதியர்க்கும் பரதே சிக்கும்
கற்றறிந்த பெரியோர்க்கும் கற்புமா தர்க்கும்
தொண்டுசெய்யு மடியார்க்கும் புவியாள்வோர்க்கும்
துன்மார்க்க தொழில்செய்ய முனைந்தி டாதே
பண்டுசொன்ன குருமொழியை மறந்தி டாதே
பரமாற்றுமா வாய்வீணாய்ப் பகர்ந்தி டாதே
விண்டுசொன்னார் நவக்கிரகக் கக்கி ஷத்தை
மெய்யென்றால் மெய்மயிலும் வேலு முற்றே. 95

7. அகஸ்திய சுவாமிகளருளிச் செய்த நவக்கிரக கக்கிஷம் முற்றும். திருச்சிற்றம்பலம்.

(இதன் பின்னால் 17 இதழ்களில் அட்டவணை எழுதப்பட்டுள்ளது)

8. மூலம். 9. எளிய நடை; பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். சோதிடமும் மாந்திரீகமும் இணைந்த நூல். 11. ரௌத்திரி வருடம் ஆனி மாதம் 24 ந் தேதி.

IV. 1. இல்லை. 2. ஆ.தி.எண்கள் 192(a), 192(g). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் பஞ்சபட்சி சாத்திரம் (R.8902) என்ற மற்றொரு நூலும் உள்ளது. இந்நூலில் இடம் பெறும் அட்டவணைகளில் ஒரு நமசிவாய சக்கரம் வருமாறு:

ய	ம	வ	ந	சி	அ
வ	ந	சி	ய	ம	எ
சி	ய	ம	வ	ந	உ
ம	வ	ந	சி	ய	ஒ
ந	சி	ய	ம	வ	ஞ

மற்றொரு நமசிவாய சக்கரம்:

ய	சி	ந	வ	ம	எ
ந	வ	ம	ய	சி	அ
ம	ய	சி	ந	வ	ஞ
சி	ந	வ	ம	ய	ஒ
வ	ம	ய	சி	ந	உ

அகத்தியர் நறுக்கு ஒட்டியம் 31

I. 1. **339**. 2. அ. R.6109. ஆ. T.R. 2568. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நறுக்கு ஒட்டியம் 31. ஆ. Akattiyar narukku ottiyam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 23 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பலகை ஓலை.

10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 24; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 31 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவமகிமை, கணபதி மகிமை, அட்ட கருமங்களின் இயல்பு கூறும் மந்திர சாத்திர நூல். 2. மந்திரம் - மாந்திரீகம். 3. இந்நூல் வசியம், ஆகர்சணம், மோகனம், தம்பனம், மாரணம், வித்துவேசணம் முதலான அட்டகர்மங்கள் பற்றியும் மாந்திரீக வித்தைகளையும் விரிவாகக் கூறுகின்றது.

4. —.

5. சீரணி கொன்றை சூடும் செஞ்சடை உடையான் பங்கில்
நாரணி கெவுரி முக்கண் நாயகி முதல்வன் பெற்ற
காரணி உமையாள் தேவி கருமங்கள் தானாய் நிற்கும்
பூரணி பெற்ற யானை முகவனைப் போற்றி செய்யே. 1

6. இல்லமும் புறம்பு மாகி யெங்குமாய் நிறைந்த தேவி
சொல்லிய கன்ம மாடு சூஷ்த்திர மாட்டுந் தேவி
எல்லம் மையான தேவி யிகத்தினில் கைகண்ட சித்தை
புல்லி கட்டை தள்ளி புதுஉருச் செய்யு முற்றே. 31

7. —.

8. மூலம். 9. எளிய நடை. அந்தாதியில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றதாயினும், ஒட்டியம் என்பது ஓட்டியர் என்பவரால் செய்யப் பெற்றது எனக் கூறுவதே மரபு. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் இச்சுவடிக்கட்டில் 1 முதல் 12 ஆம் இதழ்கள் வரை உள்ளது. அதன்பின் வரும் நூல்களாவன:

1. தட்சிணாமூர்த்தி வினோத வித்தை (R.6110) (13 முதல் 24 இதழ்கள்)

2. அகத்தியர் நறுக்குச் சல்லியம் 31 (R.6111) (25 முதல் 33 இதழ்கள்)

3. அகத்தியர் சூனியத்திறவுகோல் 34 (R.6112) (34 முதல் 43 இதழ்கள்)

அகத்தியர் நறுக்குச் சல்லியம்

I. 1. **340**. 2. அ. R. 6111. ஆ. T.R. 2568. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நறுக்குச் சல்லியம். ஆ. Akattiyar narukkuc calliyam. இ. அகஸ்தியர் நறுக்குச் சல்லியம். 4. —. 5. —. 6. பெரிய கருப்பத் தேவன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 23 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 18; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 32 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகருமங்களின் இயல்பும் மாந்திரீக முறைகளும் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. இந்நூலில் மாந்திரீகங்களின் நிலைகளும் மருத்துவச் செய்திகளும் கூறப்பெற்றுள்ளன. மாந்திரீக நிலைகள் வசியம், மாரணம் எனும் எண்வகையின. அவற்றைப் போன்றே அம்மாந்திரீகத்திற்குப் பயனாகும் மூலிகைகளும் எண்வகையின. கர்மங்கள், அவற்றின் நிவர்த்தி, அவற்றுக்காகும் மாந்திரீகம் என்பன போன்ற பல செய்திகளையும் கூறுகின்றது.

4. —.

5. ஓதிய குருவா யுந்தி ஒழிமலர்ச் சொயமாய் நின்ற
போதிகை மாம்பொதிகை நாதன் புரிந்ததோர் நறுக்கு நூலை
நீதிசொல் தமிழி னாலே நின்னய மாகச் சொல்ல
னாதனுக் குபதே சித்த வினாயகன் காப்புத் தானே. 1

6. உறுபன்னீ ராயிரம் மேனிச் சாறு
வேளைச் சாறு ளவீவீவீ யென்று வந்திடுயி
டறுங்காணா மயக்கம் மோகினியுங் கருது வர்ளே
தானுமே உரைத்துக் கர்மந் தப்பாது நறுக்கு முற்றே.

7. —.

8. மூலம். 9. வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பாடபேதங்களும் உள. மாந்திரீகச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. சல்லியம் என்ற நூலைச் சல்லியர் செய்தார் என்பர். 11. தாண்டம்பட்டி பெரிய மாயத்தேவன் மகன் பெரிய கருப்பத் தேவன்.

IV. 1. R.6161. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 408(m). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சல்லியமுனி அல்லது சித்தர் என்பவர் இயற்றியதே இந்நூல் எனக்கூறப்படுகிறது. இது ஒரு மந்திர சாத்திர நூலாகும். நறுக்கு என்பதால் முழு நூலின் ஒரு பகுதி எனக் கொள்ளலாம்.

அகத்தியர் நறுக்குச் சல்லியம்

I. 1. **341**. 2. அ. R. 6161. ஆ. T.R. 2604. இ —. ஈ. —. 3. அ. அகத்தியர் நறுக்குச் சல்லியம். ஆ. Akattiyar naṟukkuc calliyam. இ. அகஸ்தியர் நறுக்குச் சல்லியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 14; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 28 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகருமங்களின் இயல்பும் மாந்திரீகமும் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. வரிசை எண் 340 போன்றது.

4. —.

5. **ரதம்பூண்டு உருக்கமாய் காளிகோவில்**
ஒத்தேக்கால் மேலே நின்று
தயேதித்த கோரகனாம் வலதுகால் குள்ளிருத்தி
அருக்கமாயிலூ ....

....
....
....
அருள் செய்ய மரணமா வார். 1

6. மேனிச் சாறுவேளைச் சாறும்
விருப்பமாய்ப் பசலைச் சாறும்
வாணியின் லீலை யென்று
வந்திடும் வீட்டில் கோணாமல்
காணுமே மயக்க மாகிக்
கனவிலு மணத்து வாளே
தானுமே யுரைபத் ததாகும்
தப்பாது கருப்பம் முத்தே. 28

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் காணப்படுகின்றன. பிழைகள் மிகுதி. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். சல்லியர் என்பவரால் செய்யப்பெற்ற மாந்திரீக நூலுக்குச் சல்லியம் என்றும் பெயர். 11. இல்லை.

IV. 1. R.6111. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 408(m). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சல்லிய வகைகள் 16 ஆவன: தலை, எலும்பு, செங்கல், ஓடு, விறகு, விக்ரகம், சாம்பல், கரி, பிணம், தானியம், பொன், கல்தேரை, விலங்கின் கொம்பு, செத்த நாய், சாடி என்பவை. நிலத்துக்குள் புதைந்திருப்பின் அவற்றை அறிந்து கூறுதல் சல்லியம் எனப் பெறும்.

அகத்தியர் நாடி நிதானம்

I. 1. **342**. 2. அ. R. 2533. ஆ. T.R. 1390. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நாடி நிதானம். ஆ. Akattiyar nāṭi nitāṉam. இ. அகத்திய நாயன் வயித்திய குணம் நாடி நிதானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 92. 5. 34 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை

ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 183; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 530 பாடல்கள்.

ஆ. —.

